www.ecourtsindia.com

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2019 ஆம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாள் சாட்சியாகிய நரேஷ் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி இளநிலை உதவியாளர் திருமதி. சரஸ்வதி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | நரேஷ் | வயது 27 |
| த/பெ. (அ) க/பெ. | முருகேஸ் | இனம் |
| கிராமம் | ஸ்ரீபெரும்புதூர் | தொழில் சுயதொழில் |
| சமயம் | | தாலுக்கா |

STC 2584/2017

<u>குறுக்கு விசாரணை</u> 30.05.2019 புசா. 1 நரேஷ்

எதிரி இதற்கு முன்பு நண்பர் என்பதால் அவரை எனக்கு தெரியும். எங்களுக்கு 5 அல்லது 6 வருடங்கள் பழக்கம் உண்டு. 05/10/2015 அன்று நானும் எதிரியும் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் ஒரு கூட்டுத்தொழில் ஒன்றை தொடங்கினோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த ஆவணம். அதன் சான்றிட்ட நகல் எதசாஆ1. அந்த ஆவணத்தின்படி Bisoul என்ற பெயரில் ஒரு அழகு நிலையம் தொடங்கினோம் என்றால் சரிதான். அந்த அழகு நிலையம் பாண்டிச்சேரியில் தொடங்கி நடந்தது என்றால் ஆமாம். அந்த அழகு நிலைய நிர்வாகத்தை நான்தான் கவனித்து வந்தேன் என்றால் இல்லை இரண்டு பேரும் சேர்ந்து தான் பார்த்தோம். அந்த கூட்டுத்தொழில் ஒப்பந்தப்படி எனது தரப்பில் ஒன்றரை லட்சமும் எதிரியின் தரப்பில் ஒன்றரை லட்சமும் போடப்பட்டு தொடங்கப்பட்டது என்றால் சரிதான். எனது புகாரில் Ipro visuals என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதுவும் அழகு நிலையம் சம்மந்தப்பட்டதா என்றால் இல்லை அது இண்டெரியல் டிசைன் சம்மந்தப்பட்டது. இந்த தொழிலை 2013 ல் தொடங்கினேன். குறிப்பிட்டு தொடங்கப்பட்ட நாளை சொல்லமுடியுமா என்றால் நினைவில் இல்லை. 2013 ல் தொடங்கப்பட்டதாக நான் கூறுவதற்கு ஆதாரம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKP1C0008452017/truecopy/order-1.pdf

கொண்டுவரமுடியுமா என்றால் கொண்டுவரமுடியும். இன்டியா போட்டோஸ் என்ற நிறுவனத்தை யார் நடத்துகிறார் என்றால் எனது தந்தையார் நடத்துகிறார். அதை எனது தந்தை மட்டுமே நடத்துகிறார். Ipro visuals ல் பார்ட்னர் யாரும் இல்லை. நான் மட்டுமே நடத்தி வருகிறேன். எனது புகாரில் 8 தவணையாக பலதரப்பட்ட தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறியிருக்கிறேன் என்றால் ஆமாம். மேற்படி தொகைகளை நான் பணமாகத்தான் கொடுத்தேன். நான் பணமாக எதிரிக்கு கொடுத்ததற்கு வவுச்சர் ஏதேனும் வைத்துள்ளேனா என்றும் கணக்கு புத்தகம் இது குறித்து வைத்துள்ளேனா என்றால் வங்கியில் இருந்து பணத்தை எடுத்ததற்கான வித்டிராவல் ஸ்லிப் மட்டுமே உள்ளது. என்னுடைய புகாரில் தற்போது கூறியுள்ள சங்கதிகளை கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. இது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இருக்கலாம். நான் அது போல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 05/10/2015 அன்று ஏற்பட்ட கூட்டுத்தொழிலில் 11/01/2017 அன்று ஒரு விலகல் பத்திரம் மூலம் முடித்துக்கொண்டோம் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் விலகல் பத்திரம்தான் அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் எதசாஆ2. நான் எனது புகாரில் குறிப்பிட்டுள்ள அனைத்து தேதிகளுக்கு பிறகுதான் இந்த விலகல் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். விலகல் பத்திரத்திற்கு பிறகு எனக்கும் எதிரிக்கும் எந்த ஒரு தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. தொடர்பு இருந்தது. நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு எதிரியின் ஆந்திரா வங்கி ஸ்ரீபெரும்புதூர் கிளை வங்கிக் கணக்கில் இருந்து 29/11/2016 அன்று எனது வங்கி கணக்கிற்கு ரூபாய் 6 லட்சத்து 75 ஆயிரம் டிரான்ஸ்டக்சன் நடந்தது என்றால் ஆமாம். தற்போது என்னிடம் எதிரியின் வங்கி கணக்கு குறிப்பு தான் அது எதசாஆ3. அன்றைய தேதியிலேயே எதிரியின் வங்கியான கனரா பேங்க் ஸ்ரீபெரும்புதூர் கிளையில் இருந்து எனது நிறுவனமான Ipro visuals க்கு 4,50,000/- ரூபாய் காசோலை மூலம் மாற்றப்பட்டது என்றால் நான் எனது வங்கிக்கணக்கை பார்த்தால்தான் தெரியும். நீதிமன்றத்திற்கு எனது வங்கி கணக்கு புத்தகம் கொண்டுவரமுடியுமா என்றால் முடியும். 17/12/2016 அன்று எதிரியின் வங்கியான ஐடிபிஐ வங்கி ஸ்ரீபெரும்புதூர் கிளையில் இருந்து எனது நிறுவனமான Ipro visuals க்கு ரூபாய் 3,00,000/- காசோலை மூலம் மாற்றப்பட்டுள்ளது என்றால் நான் எனது வங்கிக்கணக்கை பார்த்தால்தான் கூற இயலும். மேலும் எதசாஆ 2 ன்படி எதசாஆ 1 ல் குறிப்பிட்டுள்ள எனது

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKP1C0008452017/truecopy/order-1.pdf

முதலீடான ரூபாய் 1,50,000/- ஐ எதசா ஆ2 ன் படி நான் பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்து என்றால் சரிதான். எனது புகாரில் 8 வெவ்வேறு தேதிகளில் பணம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த தேதிகளுககு பின்னிட்டு பதிவு செய்யப்பட்ட எதசாஆ2 ன்படி ஏதேனும் மேற்படி கொடுக்கப்பட்ட பணங்களில் ஏதேனும் பாக்கிகள் நிலுவைகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.நான் கூறுவது போல் உண்மையிலேயே எதிரி எனக்கு பாக்கித்தொகை கொடுக்க வேண்டி இருந்தால் அந்த பத்திரத்தில் எதசாஆ2 ல் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அந்த பத்திரத்திற்கும் பாக்கித் தொகைக்கும் சம்மந்தம் இல்லை. நான் குறிப்பிட்டுள்ளபடி எதிரியின் 3 வங்கிக்கணக்கிலிருந்து எனது நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள தொகைகள் மற்றும் எதசா ஆ2ன் படி கொடுக்கப்பட்ட தொகையான ரூபாய் 1,50,000/- சேர்த்து மொத்தமாக 15,75,000/- ரூபாய் எனக்கு எதிரியாள் கொடுக்கப்பட்டுள்ளது இந்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு அதிகமாக எதிரியிடம் இருந்து ஆவணங்களின் அடிப்படையிலேயே பணத்தை பெற்றுள்ளேன் என்றால் நான் அதை சரிபார்க்கவில்லை. புகாரில் கொடுக்கப்பட்ட பணத்திற்கும் மேற்படி தொகைக்கும் சம்மந்தம் இல்லை. மேற்படி தொகையான 15,75,000/- எதிரியின் வங்கிக்கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டது புகாரில் நான் குறிப்பிட்டுள்ள தேதிக்கு பின்னிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் எனினும் வேறு வேறு பரிமாற்றம் சம்மந்தப்பட்டவை. நான் தற்போது கூறியது போல வெவ்வேறு பரிமாற்றம் சம்மந்தப்பட்டது என்று எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. ஏன் குறிப்பிடவில்லை என்றால் அது வேறு இது வேறு என்பதால் குறிப்பிடவில்லை. எனது புகாரில் எதிரியை நண்பர் என்றுதான் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் கூட்டுத்தொழில் செய்யும் விவரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. பணம் கொடுத்த விவரங்களை மறைப்பதற்காக நான் புகாரில் மேற்படி விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தையாருக்கும் மேற்படி Bisoul நிறுவனத்திற்கும் பங்கு இருந்ததா என்றால் இல்லை. 29/11/2016 அன்று எதிரியின் வங்கி கணக்கான ஐடிபிஐ ஸ்ரீபெரும்புதுர் கிளையிலிருந்து ரூபாய் 5,50,000/- எனது தந்தையாரின் இண்டியா போட்டோஸ் நிறுவனத்தின் வங்கிக்கணக்கிற்கு நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாற்றப்பட்டது என்றால் சரிதான். அதே தேதியில் எதிரியின் வங்கிகணக்கான யூனியன் வங்கி ஸ்ரீபெரும்புதுர் கிளையிலிருந்து ரூபாய் 3,25,000/- எனது தந்தையாரின் இண்டியா போட்டோஸ் நிறுவனத்தின் வங்கிக்கணக்கிற்கு நான்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKP1C0008452017/truecopy/order-1.pdf

கேட்டுக்கொண்டதற்கிணங்க மாற்றப்பட்டது என்றால் சரிதான்.09/12/2016 அன்று எதிரியின் வங்கிகணக்கான யூனியன் வங்கி ஸ்ரீபெரும்புதுர் கிளையிலிருந்து ரூபாய் 3,00,000/- எனது தந்தையாரின் இண்டியா போட்டோஸ் நிறுவனத்தின் வங்கிக்கணக்கிற்கு நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் புதசா1 ஒத்துக்கொண்தற்கிணங்க எதசஆ 4 மற்றும் 5 ஆக எதிரிரியின் தரப்பில் குறியீடு செய்யப்பட்டது. 29/12/2016 அன்று எதிரியின் ஆக்ஸிஸ் பேங்க் இருங்காட்டுகோட்டை கிளையிலிருந்து எனது தந்தையார் வங்கி கணக்கிற்கு ரூபாய் 3,00,000/- மாற்றப்பட்டுள்ளது என்றால் கணக்கை பார்த்தால்தான் கூற இயலும். தற்போது எனது தந்தையாரின் வங்கிக் கணக்கிற்கு வெவ்வேறு வங்கி கணக்கிற்கு பண பரிமாற்றம் நடந்த தேதிகள் அனைத்தும் புகாரில் குறிப்பிட்டுள்ள 8 தேதிகளுக்கு பின்னிட்டு எதசாஆ2 தேதிக்கு முன்னிட்டும் உள்ளது என்றால் சரிதான்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNKP1C0008452017/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com